# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Caste | : | |
| S/o. | : | சடையன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 01.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் மல்லியகரையில் குடியிருக்கிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. அரசாங்கத்திலிருந்து எனக்கு உதவி பணம் வருகிறது. ஆஜர் எதிரி எங்கள் ஊர்க்காரரர் என்பதால் அவரை தெரியும்.

2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள், எங்கள் ஊரில் திருவிழா போட்டிருந்தார்கள். இரவு 10.00 மணி அளவில் நான் என்னுடைய வீட்டுக்கு முன்னால் வாசல்படியில் இருந்தேன். அப்போது அங்கிருந்த

10 பேர் அவர்களுக்குள் சண்டைபோட்டுக்கொண்டார்கள். அப்போது ஒரு சிலர் என் மீது விழுந்துவிட்டார்கள், அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் என்னை ஆம்புலன்சில் ஏற்றி ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். போலிசார் என்னிடம் எழுதப்படாத வெள்ளை காகிதத்தில் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது. புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் 6 மாதத்திற்கு முன்னர் மல்லியகரை சந்தைபேட்டை சார்ந்த அசோகன் மகன் செல்வகுமார் குடிபோதையில் எங்கள் வீட்டிற்கு முன்பு நின்று ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதற்கு நான் வீட்டிற்கு போடா என்று சொன்னேன் என்றும், அவன் கெட்டவார்த்தையால் என்னை திட்டினார் என்றும் அதனால் எனக்கும் அவனுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 17.8.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு ஆஜர் எதிரி ஆபாசமாக திட்டி இன்னைக்கு வாடா பார்க்கலாம்எ ன்று திட்டினார் என்றும், அதற்கு நான் வேனும்னே வம்பு சண்டைக்கு வர நீ வீட்டுக்கு போடா என்று சொன்னேன் என்றும், ஆஜர்

எதிரி போடா நொண்டி பயலே என்று என்னை திட்டி கன்னத்தில் ஓங்கி அடித்தார் என்றும் கீழே தள்ளி காலால் நெற்றியிலும் முதுகிலும் உதைத்தான் என்றும் கீழே கிடந்த கட்டையை எடுத்து இடது கண் புருவத்தில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், அதே கட்டையால் பின்தலையில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் என் மகள் புவனேஸ்வரி அங்கு வந்தபோது அவரையும் ஆபாசமாக திட்டி தலை மயிரை பிடித்து இழுத்து கையால் கன்னத்தில் அடித்து அவரது நைட்டியை கிழித்துவிட்டார் என்றும் வீட்டுக்குள்ளே போய் டிவி, சேர் ஆகியவற்றை எடுத்து கீழே போட்டு உடைத்து சேதப்படுத்தினார் என்றும், அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து ஒழுங்கா போடா என்று திட்டினார்கள் என்றும் எதிரி தான் கையில் வைத்திருந்த கட்டையை காட்டி மிரட்டினார் என்றும் பின்னர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து சிகிச்சை பெற்றேன் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு அவரை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.